# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 2005 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, இலங்கை உடரட அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்

---

*(2005 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2005, ஓகத்து மாதம் 26 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 22.75** **தபாற் செலவு : ரூபா 7.50**

# 2005 ஆம் ஆண்டின் 26 இலக்க, இலங்கை உடறட அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்

[2005 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 24 ஆம் தேதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ. ஓ. 19/2004

**உடறட பிரதேசத்தினுள் அபிவிருத்திக் கருத்திட்டங்களை இனங்கண்டு வகுத்தமைத்து, அதன் அமுலாக்கத்தை ஒருங்கிணைக்கும் நோக்கத்திற்காக இலங்கை உடறட அபிவிருத்தி அதிகாரசபையைத் தாபிப்பதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம் 2005 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, இலங்கை உடறட அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம். என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

## அத்தியாயம் I

### இலங்கை உடறட அபிவிருத்தி அதிகாரசபையைத் தாபித்தல்

**2.** (1) (இது இதனகத்துப்பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "இலங்கை உடறட அபிவிருத்தி அதிகாரசபை" என அழைக்கப்பட வேண்டிய அதிகாரசபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

இலங்கை உடறட அபிவிருத்தி அதிகார சபையைத் தாபித்தல்.

(2) அதிகாரசபையானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்துதொதுக்கப்பட்ட பெயரின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன், இடையறா வழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும் ; அத்துடன் அத்தகைய பெயர் கொண்டு வழக்குத் தொடரலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடரவும் படலாம்.

**3.** (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, அதிகாரசபையின் இடப்பரப்பின் அதிகாரமானது, கண்டி, மாத்தளை, நுவரஎலிய கேகாலை, இரத்தினபுரி, பதுளை, மொனராகலை மற்றும் அம்பாறை நிருவாக மாவட்டங்களினுள் அடங்குகின்ற ஏதேனும் இடப்பரப்புக்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்.

அதிகார சபையின் இடப்பரப்பு.

2 –PL 000326– 1,250 (2005/06)

(2) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அமைச்சரானவர், காலத்துக்குக் காலம் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், மேற்கூறப்பட்ட ஏதேனும் நிருவாக மாவட்டங்களுள் அடங்கும் ஏதேனும் பிரதேசச் செயலாளர்கள் பிரிவொன்றினை அல்லது அதன் பாகமொன்றை "பெயர் குறிப்பிட்ட இடப்பரப்பு" ஒன்றாக இனங்காணலாம் :

ஆயின் எவ்வாறாயினும் அதிகாரசபையானது இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாகக் கூடியளவு பெயர் குறிப்பிடப்பட்ட இடப்பரப்புக்கு வெளியே வேறு ஏதேனும் நடவடிக்கையில் ஈடுபடுவதற்காகக் கிளை அலுவலகங்களைப் பேணலாம்.

அதிகாரசபையின் முகாமையின் சபையை அமைத்தல்.

**4.** அதிகாரசபையின் அலுவல்களின் முகாமையானது, (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சனாதிபதியினால் நியமிக்கப்படும், பின்வருவோரைக் கொண்டிருக்க வேண்டிய முகாமைச் சபையொன்றுக்கு உரித்தாக்கப்படல் வேண்டும்.

(அ) பதவிவழி உறுப்பினர்கள் வருமாறு —

(i) உடறட அபிவிருத்தி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்.

(ii) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் திறைசேரிக்கான பிரதிச் செயலாளர் பதவியை வகிப்பவரும், அத்தகைய அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்படுபவருமான அலுவலர் ஒருவர் ;

(iii) அத்தகைய அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் பெருந்தோட்ட உள்ளகக் கட்டமைப்பு என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சு அலுவலர் ஒருவர் ; அத்துடன்

(ஆ) அமைச்சரின் விதப்புரையின்மீது சனாதிபதியால் நியமிக்கப்படும் (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்" எனக் குறிப்பீடு செய்யப்படும் ) ஐந்து உறுப்பினர்கள்.

அதிகார சபையின் தவிசாளர்.

**5.** (1) சனாதிபதி, அதிகாரசபையின் தவிசாளராக இருப்பதற்கென சபையின் உறுப்பினர்களிடையேயிருந்து உறுப்பினர் ஒருவரைப் பெயர்குறித்து நியமித்தல் வேண்டும். (இவர் இதனகத்துப் பின்னர் "தவிசாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்)

(2) தவிசாளர், சுகயீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அவரது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதவராக இருப்பின் அவரது இடத்திற் செயலாற்றுவதற்கென சனாதிபதி வேறோர் உறுப்பினரை நியமிக்கலாம்.

(3) சனாதிபதி குறித்தொதுக்கப்பட்ட காரணங்களுக்காக தவிசாளரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(4) தவிசாளர், சனாதிபதிக்கு முகவரியிட்டெழுதப்பட்ட கடிதத்தின் மூலம் எந்நேரத்திலும் தவிசாளர் பதவியிலிருந்து விலகலாமென்பதுடன் அத்தகைய பதவிவிலகல், சனாதிபதியால் எழுத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவதன்மீது பயனுறுதலும் வேண்டும்.

சபையின் உறுப்பினராக இருப்பதற்கான தகைமையீனம்.

**6.** ஆளொருவர் –

(அ) பாராளுமன்ற உறுப்பினரொருவராக அல்லது ஒரு மாகாணசபை உறுப்பினரொருவராக அல்லது உள்ளூரதிகாரசபை உறுப்பினரொருவராக இருப்பின்; அல்லது வரின்

(ஆ) இலங்கைப் பிரஜை ஒருவரல்லாதவராயின் அல்லது அல்லாதவராக்கப்படின்;

(இ) இலங்கையிலோ அல்லது வேறோரு நாட்டிலோ வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீன மற்றவராகக் காணப்படின் அல்லது வெளிப்படுத்தப்படின்;

(ஈ) இலங்கையிலுள்ள அல்லது வேறு ஏதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பை அனுபவிப்பவராக அல்லது அனுபவித்திருப்பவராக இருப்பின்;

(உ) அதிகாரசபையால் அல்லது அதிகாரசபை சார்பாக செய்யப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின் கீழ் ஏதேனும் உரிமை அல்லது நன்மையை கொண்டிருப்பவராக அல்லது அனுபவிப்பவராக இருப்பின் ;

(ஊ) இலங்கையின் அல்லது வேறேதேனும் நாட்டின் ஏதேனும் சட்டத்தின்கீழ் கடனிறுக்க வகையற்ற ஒருவரென அல்லது வங்கி முறிந்தவரென வெளிப்படுத்தப்பட்டு பொறுப்பு விடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்ற ஒருவராக அல்லது வங்கி முறிந்தவராக இருப்பின்,

அவர், அதிகாரசபையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது அவ்வாறு தொடர்ந்திருப்பதற்கு தகைமையற்றவராதல் வேண்டும்.

*நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் பதவியிலிருந்து அகற்றப்படுதலும் பதவிதுறத்தலும்.*

**7.** (1) நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் சனாதிபதிக்கு முகவரியிடப்பட்டு எழுதப்பட்ட கடிதத்தின் மூலம் எந்நேரத்திலும் தமது பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன், அத்தகைய பதவி விலகலானது, சனாதிபதியால் எழுத்தில் ஏற்றுக் கொள்ளப்படுவதன்மீது பயனுறுதலும் வேண்டும்.

(2) சனாதிபதி குறித்தொதுக்கப்பட்ட காரணங்களுக்காக நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரை பதவியிலிருந்து அகற்றலாம்.

(3) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், இறக்குமிடத்து, பதவி விலகுமிடத்து அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுமிடத்து, சனாதிபதி, 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற் கொண்டு அவரது இடத்துக்கு இன்னுமொரு உறுப்பினரை நியமித்தல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தலும் வேண்டும்.

**8.** (1) ஏழாம் பிரிவின் (1) மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, நியமிக்கப்பட்ட சபை உறுப்பினரின் பதவிக் காலம் ஐந்து வருடமாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய உறுப்பினர் மீள் நியமனத்திற்கு தகுதியுடையவராதலும் வேண்டும். உறுப்பினர்களின் பதவிக் காலம்.

(2) பதவியிலிருந்து அகற்றப்பட்டுள்ளவரான நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், சபையின் உறுப்பினராக மீள நியமிக்கப்படுவதற்கோ அல்லது வேறு ஏதேனும் தன்மையில் அதிகார சபையில் சேவையாற்றுவதற்கோ தகுதியுடையவராதல் ஆகாது.

**9.** (1) அதிகாரசபையின் தவிசாளர், சமூகமாயிருப்பின், சபையின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமைதாங்குதல் வேண்டும். ஏதேனும் அத்தகைய கூட்டத்திற்கு தவிசாளர் சமூகமளிக்காதவிடத்து சமூகமாயிருக்கும் உறுப்பினர்கள், அத்தகைய கூட்டத்திற்கு தலைமைதாங்கவென சமூகமாகியிருக்கும் உறுப்பினர்களில் ஒருவரை தேர்ந்தெடுத்தல் வேண்டும். சபையின் கூட்டங்கள்.

(2) சபையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்டநடப்பெண் நான்கு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கு அமைவாக, சபையானது சபையின் கூட்டங்கள் தொடர்பான அதன் நடவடிக்கை முறையையும் அத்தகைய கூட்டங்களின்போதான அலுவல்களின் கையாளுகையையும் ஒழுங்குபடுத்தலாம்.

**10.** அதிகாரசபையின் உறுப்பினர்களுக்கு அதிகாரசபையின் நிதியத்திலிருந்து நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய விகிதங்களில் ஊதியம் செலுத்தப் படலாம். உறுப்பினர்களின் ஊதியம்.

**11.** சபையின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக மாத்திரம் அல்லது அதன் உறுப்பினர் எவரினதும் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு காரணமாக சபையின் செயல், தீர்மானம் அல்லது நடவடிக்கை எதுவும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது. வெற்றிடமொன்று இருப்பதன் காரணமாக செயல்கள் செல்லுபடியற்றதாக்கப்படுதலாகாது.

*அதிகார சபையானது அரசாங்கத்தின் பொது கொள்கையுடன் இணங்கி யொழுகுதல்.*

**12.** அதிகாரசபையானது, அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையிலும், அதன் பணிகளைப் புரிகையிலும் அதன் கடமைகளை நிறைவேற்றுகையிலும் அரசாங்கத்தின் பொதுக்கொள்கையுடனும் மற்றும் அத்தகைய கொள்கையை நடை முறைப்படுத்துவது தொடர்பில அமைச்சரால் வழங்கப்பட்ட எவையேனும் பொது அல்லது விசேட பணிப்புக்களுடனும் இணங்கியொழுகுதல் வேண்டும்.

*அதிகாரசபையின் இலச்சினை.*

**13.** (1) அதிகாரசபையின் இலச்சினையானது சபை காலத்துக்குக்காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் இலச்சினை சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) அதிகாரசபையின் இலச்சினையானது சபையின் தவிசாளரினதும் வேறோர் உறுப்பினரினதும் முன்னிலையில் தவிர, ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது ; இவர்களிருவரும் தாங்கள் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அத்தகைய சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும் :

ஆயினும் அதிகாரசபையின் இலச்சினை ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படும் நேரத்தில் தவிசாளரால் சமூகமளிக்க இயலாதிருக்குமிடத்து, அதுசார்பில் தவிசாளரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட சபையின் வேறு எவரேனும் உறுப்பினர் இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய சானத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுவதற்குத் தகுதிவாய்ந்தவராதல் வேண்டும்.

(4) எந்தச் சாதனங்களுக்கும் ஆவணங்களுக்கும் அதிகார சபையின் இலச்சினை பொறிக்கப்படுகின்றதோ அந்தச் சானதங்களினதும் ஆவணங்களினதும் பதிவேடொன்றை சபையானது பேணிவருதல் வேண்டும்.

## அத்தியாயம் II

## அதிகாரசபையின் குறிக்கோள்களும், சபையின் தத்துவங்களும், கடமைகளும் பணிகளும்

**14.** அதிகாரசபையின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் :- *அதிகாரசபையின் குறிக்கோள்கள்.*

(அ) விளைவுப்பெருக்கத்தை முன்னேற்றுவதற்கும், பொருளாதார, சமூக. கலாசார, சூழல் அபிவிருத்தியை பேணி வளர்ப்பதற்கும் அத்துடன் வருமானத்தையும் தொழில்வாய்ப்பையும் உண்டு பண்ணுவதற்கும் ஏதேனும் பெயர்குறிப்பிட்ட இடப்பரப்பில் அபிவிருத்திக் கருத்திட்டங்களைத் திட்டமிடலும் அமுலாக்குதலும்;

(ஆ) பெயர்குறிப்பிட்ட இடப்பரப்பிற்கான, முழுவளவிலான அபிவிருத்தித் திட்டத்தில் இனங்காணப்பட்ட கருத்திட்டத்தின் விரிவான ஆய்வுகளை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளுதல் ;

(இ) வரலாறு, சமூக மற்றும் வேறு காரணிகள் காரணமாக வலதுகுறைந்தவர்களான மக்கள் குழுமங்களை இனங்காணுதலும், அவர்களது சமூக பொருளாதார நிலைமைகளை உயர்த்துவதற்கான உத்தேசங்களைத் தயாரித்தலும், நிதிகளைச் சேகரித்தலும் கருத்திட்டங்களை நிறைவேற்றுதலும் ;

(ஈ) முழு தேசத்துக்குமான அதன் வரலாற்று முக்கியத்துவம், கலாசார மற்றும் பொருளாதார முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, கண்டி நகரத்தையும் அதன் பாரம்பரியத்தையும் பேணிக்காத்தல் மற்றும் கலாசார நிறுவனங்கள், சூழல் மற்றும் உட்கட்டமைப்பு என்பவற்றைப் பேணுவதற்கு விசேஷ கவனத்தைச் செலுத்துதல் ;

(உ) பெயர்குறிப்பிடப்பட்ட இடப்பரப்பில் பந்தி (ஆ) என்பதில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆய்வுகளை மேற்கொள்வதிலும், அபிவிருத்திக் கருத்திட்டங்களை அமுலாக்குவதிலும், அரசாங்கத் திணைக்களங்களினதும், அரச நிறுவனங்களினதும், உள்ளூரதிகாரசபைகளினதும்,

பகிரங்கக் கூட்டுத்தாபனங்களினதும் மாகாண நிறுவனங்களினதும், அத்துடன் வேறு இயற்கையான அல்லது சட்டநபர்களதும் அல்லது தனியார் அல்லது பகிரங்க ஆட்களினதும் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளுதல் ;

(ஊ) பெயர்குறிப்பிட்ட இடப்பரப்பில் பந்தி (ஆ) என்பதில் குறிப்பீடுசெய்யப்பட்ட விரிவான ஆய்வுகளை மேற்கொள்வதிலும் அபிவிருத்திக் கருத்திட்டங்களை அமுலாக்குவதிலும், வெளிநாட்டு மற்றும் உள்ளூர் தனியார்துறை முகவராண்மைகளின் பங்கேற்பைப் பெற்றுக்கொள்ளுதல்.

சபையின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்.

**15.** அதிகாரசபையானது, அதன் குறிக்கோள்களை கொண்டு நடாத்தும் நோக்கத்திற்காகப் பின்வரும் தத்துவங்கள், கடமைகள், பணிகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் பிரயோகிக்கலாம், புரியலாம் அத்துடன் நிறைவேற்றலாம் :-

(அ) ஏதேனும் பெயர்குறிப்பிட்ட இடப்பரப்பினுள் அமுலாக்குவதற்காக அபிவிருத்தி கருத்திட்டங்களை இனங்காணுதலும் அங்கீகரித்தலும் ;

(ஆ) அதிகாரசபையின் குறிக்கோள்களை கொண்டுநடாத்துவதில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டுமூலங்களில் இருந்து தொழில்நுட்ப மற்றும் நிதியுதவியைப் பெறுதலும் பெற்றுக்கொள்வதும் ;

(இ) ஏதேனும் பெயர்குறிப்பிட்ட இடப்பரப்பினுள் விசேட அபிவிருத்திக் கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு நோக்கப்பட்ட ஆய்வுகளைக் கொண்டுநடாத்துவதற்கு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு உதவியைப் பெறுதல். ;

(ஈ) பெயர்குறிப்பிட்ட இடப்பரப்பினுள் கொண்டுநடாத்தப் படும் கருத்திட்டங்கள் எவற்றையும் செயற்படுத்து வதற்குப் பொறுப்பாக இருக்கும் அமைச்சுகளையும், அரசாங்கத் திணைக்களங்களையும் மற்றும் வேறு எல்லா முகவர் நிலையங்களையும் அத்தகைய கருத்திட்டங்களைத் திட்டமிட்டு செயற்படுத்துவதில் ஒத்துழைப்பு வழங்குமாறு தேவைப்படுத்துதல் ;

(உ) அதிகாரசபையின் ஏதேனும் அபிவிருத்திக் கருத்திட்டத்தைப் பொறுப்பேற்று, பேணி செயற்படுத்துமாறு ஏதேனும் அமைச்சை, திணைக்களங்களை அல்லது வேறு முகவர் நிலையத்தைக் கோருதல் ;

(ஊ) ஏதேனும் பெயர்குறிப்பிட்ட இடப்பரப்பினுள் அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான அதன் தனிப்பட்ட பிரிவுகளை அல்லது முகவர் நிலையங்களைத் தாபித்தல் ;

(எ) பெயர்குறிப்பிட்ட இடப்பரப்பில் பொருளாதார மற்றும் சமூக, கலாசார மற்றும் சூழல் அபிவிருத்தி தொடர்பிலான ஆராய்ச்சியைக் கொண்டுநடாத்துதல் ;

(ஏ) ஏதேனும் பெயர்குறிப்பிட்ட இடப்பரப்பினுள் செயற்படுத்தவுள்ள ஏதேனும் அபிவிருத்திக் கருத்திட்டம் தொடர்பில் சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையொன்றைத் தயாரித்தல் ;

(ஐ) அபிவிருத்திக் கருத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு அவசியமான பொருட்களையும் சேவைகளையும் பெறுவதற்கான கேள்விகளை காலத்திற்குக்காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட கேள்வி நடைமுறைகளுக்கிணங்க வழங்குதல் ;

(ஒ) பெயர்குறிப்பிட்ட இடப்பரப்புக்குள் அதிகாரசபையினால் வழங்கப்பட்ட சேவைகளுக்காக விதிப்பனவொன்றை விதித்தல் அல்லது இறுத்தல் ;

(ஓ) அபிவிருத்திக் கருத்திட்டம் எதனையும் செயற்படுத்துவதற்கு அவசியமானதாக வரக்கூடிய எவையேனும் அலுவலகங்களை, பொறித்தொகுதிகளை, இயந்திரத் தொகுதியை அல்லது வேறுபொருளைக் கொள்வனவு செய்தல், கொள்ளல், நிறுவுதல், பேணுதல் ; மீள் நிர்மாணம் செய்தல் அல்லது இசைவாக்கல் ;

(ஔ) அபிவிருத்திக் கருத்திட்டங்களை, பகிரங்க அல்லது தனியார் நிறுவனங்கள் ஊடாக அல்லது கூட்டாகப் பகிரங்க மற்றும் தனியார் நிறுவனங்கள்மூலம் செயற்படுத்துதல் ;

(க) ஏதேனும் அபிவிருத்திக் கருத்திட்டத்தை செயற்படுத்து வதற்கு அவசியமான பணத்தை இலங்கையில் உள்ள மூலங்களிலிருந்து கடனாகப் பெறுதல், திரட்டுதல் அல்லது கடப்பாடுகளைப் பெறுதல் ;

(ங) அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் கொள்ளல் அல்லது வைத்திருத்தல் ;

(ச) இயைபான அமைச்சுக்களின் அனுசரணையுடன் நீர்ப்பெருக்கு முகாமைக்கும், மண்ணரிப்பைக் கட்டுப் படுத்துவதற்கும் அவசியமானவாறான அத்தகைய வழிகளை எடுத்தல் ;

(ஞ) இயைபான அமைச்சுக்கள் மற்றும் தனியார் தொழில் முயற்சியாளர்களின் அனுசரணையுடன், பண்ணை களை முகாமை செய்தல் அத்துடன், பண்ணைத் தொழில், கமத்தொழில் மற்றும் தோட்டக்கலை நடவடிக்கைகளில் ஈடுபடல் ;

(ட) பயிர்ச்செய்கைநுட்பங்கள், நீர்முகாமைத்துவம், மண் முகாமைத்துவம் மற்றும் பௌதீகச் சூழலைப் பேணு தல் முதலியவற்றை மேம்படுத்துவதற்கான ஆலோ சனை மற்றும் பண்ணையாளர் பயிற்சி சேவைகளை வழங்குதல் ;

(ண) அரச மற்றும் தனியார் வங்கிகளின் அனுசரணையுடன் விவசாயிகளுக்கான கடன்கண்காணிப்புத் திட்டங்களை முகாமை செய்தலும் தொழிற்படுத்தலும் ;

(த) விவசாயிகளுக்கு, விதை பொருட்கள், உரங்கள், கம இரசாயனங்கள், வலுகமத்தொழில் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் போன்ற கமத்தொழில் உள்ளீடு களை வழங்குதல் ;

(ந) இயைபான அமைச்சுக்களின் அனுசரணையுடன் கமத் தொழில் அபிவிருத்தி மற்றும் கமநல அடிப்படை யிலான குறித்த கமத்தொழில் அல்லது அது தொடர்பான நடவடிக்கைகள் தொடர்பில் ஆய்வை வசதிப்படுத்தல் அல்லது ஒப்பந்தம் செய்தல் ;

(ப) கமத்தொழில் அடிப்படையிலான அல்லது அது தொடர்பான கைத்தொழில் மற்றும் வர்த்தக தொழில் முயற்சிகளைத் தாபித்தலை மேம்படுத்தலும் ;

(ம) பண்ணை விவசாய மற்றும் வேறு விளைபொருட் களைக் கொள்வனவு செய்தல், களஞ்சியப்படுத்துதல், பதனிடல் மற்றும் விற்பனை செய்தல் என்பனவற் றுக்கான சந்தைப்படுத்தல் சேவைகள் தாபனத்தை மேம்படுத்தல் ;

(ய) ஏதேனும் பொறித்தொகுதி, இயந்திரம், கருவிகள், பண்டங்கள் அல்லது எவ்வகையானதுமான பொருட் களை உற்பத்தி செய்தல் மற்றும் வியாபாரம் செய்தலை மேம்படுத்தல் ;

(ர) பண்டங்கள், விளைப்பொருட்கள், பொருட்கள் அல் லது வியாபாரப் பொருட்கள் என்பவற்றை இறக்குமதி செய்தல் ஏற்றுமதிசெய்தல், வாங்குதல், விற்றல் அல் லது வேறுவகையில் கையாளுதல் ;

(ல) அதிகாரசபையின் அத்தகைய குறிக்கோள்களை மேம் படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்குச் சாத்திய மானவாறான, ஏதேனும் கம்பெனி, சங்கம் அல்லது பொறுப்புமுயற்சி என்பனவற்றிலுள்ள பங்குகளை அல்லது பங்குத்தொகுதியை, ஒப்பப்பணம் செலுத்து வதன்மூலம் கொள்ளுதல் அல்லது வேறுவகையிலும் கொள்வனவு செய்தல் அத்துடன் ஏற்றுக்கொள்ளு தலும், பெறுதலும், வைத்திருத்தலும் அத்துடன் விற்பனை செய்தலும் ;

(வ) அத்தகைய ஏதேனும் கம்பெனிக்குச் செய்யப்பட்ட ஏதேனும் விற்பனை அல்லது ஏதேனும் அத்தகைய கம்பெனியிலிருந்து வருமதியாகவுள்ள கடனுக்காக முழுமையாக அல்லது பாகமொன்றைச் செலுத்தி ஏதேனும் கம்பெனியின் எவையேனும் பங்குத் தொகுதி கள் அல்லது பங்குகள் அல்லது தொகுதிக் கடன்கள் அல்லது வேறு பிணைகளை ஏற்றுக் கொள்ளுதல்

(அஅ) அதிகாரசபையின் குறிக்கோள்களை எய்துவதற்காக துணைக் கம்பெனிகளில் பங்குகொள்ளுதலும், முதலீடு செய்தலும், மேம்படுத்துதலும் ;

(ஆஆ) அரசியலமைப்பு மற்றும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, அதிகார சபையின் குறிக்கோள்களை எய்துவதற்கு அல்லது இச்சட்டத்தின் கீழான அதன் தத்துவங்களை பிர யோகிப்பதற்கு இடைநேர்விளைவான அல்லது உசித மானவாறான அத்தகைய வேறு எல்லா நடவடிக்கை களைச் செய்தல்.

*ஏதேனும் ஒப்பந்தத்தைச் செய்வதற்கான சபையின் தத்துவங்கள்.*

**16.** சபையானது, அதிகாரசபையின் தத்துவங்களைப் பிரயோகித்தல், கடமைகளைப் புரிதல் மற்றும் பணிகளை நிறை வேற்றும் நோக்கத்துக்காக ஏதேனும் அரசாங்கத் திணைக்களத் துடன் மாகாணசபையுடன், உள்ளூர் அதிகாரசபையுடன் அத் துடன் வேறு ஏதேனும் குழுவொன்றுடன் அவை தனியார்துறை யைச் சார்ந்தவையாயிருந்தாலென்ன, அரசாங்கத்துறையைச் சார்ந்தவையாயிருந்தாலென்ன அல்லது எவரேனும் ஆளுடன் கூட்டுமுயற்சிகள் உட்பட உடன் படிக்கையைச் செய்வதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) அத்தகைய உடன்படிக்கை ஒவ்வொன்றும் எழுத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன், அதிகாரசபையில் பதிவுசெய் வதன்மீது அதிகாரசபைக்கும் ஏனைய அத்தகைய அரச திணைக் களம், உள்ளூர் அதிகாரசபை அல்லது வேறு குழுவொன்றுக்கு அல்லது வேறு ஆளுக்குமிடையில் செல்லுபடியானதும் பிணிக்கின்றதுமான ஒப்பந்தமொன்றை உருவாக்குதலும் வேண்டும்.

*அதிகார சபைக்காக இலங்கைக்கு வெளியே செயலாற்றுவதற்கு ஆட்களுக்குத் தத்துவமளித்தல்.*

**17.** அதிகாரசபையானது இலங்கைக்கு வெளியே எவ்விடத்தி லும் அதற்காக அல்லது அதன் சார்பில் ஒன்றில் பொதுவாக அல்லது குறிப்பிடப்பட்ட ஏதேனும் விடயம் தொடர்பில் செயலாற் றுவதற்கென எழுத்தில் அதன் இலச்சினையின்கீழ் அல்லது அதி காரசபையால் ஆக்கப்பட்ட விதிகளினால் ஏற்பாடு செய்யப்படக் கூடியவாறான அத்தகைய வேறு முறையில் ஆள் எவருக்கும் தத்துவமளிக்கலாம்.

*ஏதேனும் அரசாங்க திணைக்களத்துக்கு அல்லது கூட்டுத்தாபனத்துக்கு பணிப்புக்களை விடுப்பதற்கு சபைக்குள்ள தத்துவங்கள்.*

**18.** (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்கு அவசியமானதென அதிகாரசபை கருதுகின்றவிடத்து, அதிகாரசபையானது சனாதிபதியின் அங்கீகாரத்துடன் அபிவிருத்திக் கருத்திட்டங்களைச் செயற்படுத்துவது தொடர்பில் பெயர்குறிக்கப்பட்ட இடப்பரப்பில் அல்லது அவ்விடப்பரப்பு தொடர்பில் அதிகாரசபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய பணிகளை அல்லது கடமைகளைப் புரியுமாறு அல்லது நிறைவேற்றுமாறு ஏதேனும் திணைக்களத்தை அல்லது கூட்டுத்தாபனத்தைக் கலந்தாலோசித்த பின்னர் விசேடமான அல்லது பொதுவான பணிப்புகளை ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்துக்கு அல்லது கூட்டுத்தாபனத்திற்கு விடுக்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் அதிகாரசபையினால் எத் திணைக்களத்துக்கு அல்லது கூட்டுத்தாபனத்துக்குப் பணிப்பு எதுவும் விடுக்கப்படுகின்றதோ, அத்திணைக்களம் அல்லது கூட்டுத்தாபனம் அத்தகைய பணிப்புக்களுடன் இணங்கியொழுகுதல் அதற்குச் சட்ட முறையானதாதல் வேண்டும்.

(3) எத்திணைக்களத்திற்கு அல்லது கூட்டுத்தாபனத்துக்கு (1) ஆம் உட்பிரிவின்கீழ் பணிப்பு எதுவும் விடுக்கப்படுகின்றதோ, அத்திணைக்களம் அல்லது கூட்டுத்தாபனம் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்குமைவாக அதிகாரசபையின் மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டுக்கு அமைவாக (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட பணிப்புக்களினால் குறித்தொதுக்கப்பட்ட கடமைகளைப் புரிதலும் பணிகளை நிறைவேற்றுதலும் வேண்டும்.

*காணியை கட்டாயமாகக் கொள்ளல்.*

**19.** (1) அதிகாரசபையால், எவையேனும் கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கும், ஏதேனும் பெயர்குறிப்பிட்ட இடப்பரப்பினுள் ஏதேனும் காணி அல்லது ஏதேனும் காணியிலுள்ள அக்கறை தேவைப்படுத்தப்பட்டு அத்துடன் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் உத்தேசிக்கப்பட்ட கொள்ளலுக்கு அங்கீகாரம் அளித்துள்ளவிடத்தும், அந்தக் காணி அல்லது காணியிலுள்ள அக்கறை பகிரங்க நோக்கமொன்றுக்குத் தேவைப்படுகின்றதென்றாற்போன்று அதற்கிணங்க அக்காணி அல்லது அக்கறை (460 ஆம் அத்தியாயமான) காணிகொள்ளல் சட்டத்தின் கீழ் கொள்ளப்பட்டு அதிகாரசபைக்குக் கைமாற்றவும்படலாம் :

ஆயினும், எவ்வாறாயினும், பெயர்குறிப்பிடப்பட்ட இடப்பரப்பினுள் அமைந்துள்ள தோட்டமொன்றின் ஏதேனும் காணியை அல்லது ஏதேனும் காணியில் உள்ள ஏதேனும் அக்கறையை

அதிகாரசபை தேவைப்படுத்துகின்றவிடத்து, அமைச்சர் அத்தகைய காணியை அல்லது அத்தகைய காணியில் உள்ள அக்கறையை கொள்ளுவதற்கான இப்பிரிவின்கீழ் கட்டளையொன்றை வெளியிடுவதற்கு முன்னர் பெருந்தோட்ட உள்ளகக் கட்டமைப்பு என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரைக் கலந்தாலோசித்தல் வேண்டும்.

(2) பெயர்குறிப்பிட்ட இடப்பரப்பிலுள்ள ஏதேனும் காணி அல்லது ஏதேனும் காணியிலுள்ள ஏதேனும் அக்கறை, அதிகாரசபையின் ஏதேனும் நோக்கத்துக்காகக் காணிகொள்ளல் சட்டத்தின்கீழ் கொள்ளப்பட இருக்கின்றவிடத்தும், அத்துடன் அக்காணியை அல்லது அக்கறையைக் கொள்வதற்கான எண்ணம் பற்றிய பகிரங்க அறிவித்தலானது, மேற்சொல்லப்பட்ட சட்டத்தினால் தேவைப் படுத்தப்பட்டவாறு (1) ஆம் உட்பிரிவின் கீழ் கட்டளை வெளியிடப்பட்ட தேதியிலிருந்து ஆரம்பிக்கின்ற மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்குள் வெளியிடப்பட்டும் இருக்கும் விடயம் எதிலும், அச்சட்டத்தில் முரணாக எது எப்படியிருப்பினும், அக்காணி அல்லது அக்கறை தொடர்பில் செலுத்தப்பட வேண்டிய நட்ட ஈட்டுத் தொகையைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்குப் பின்வரும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும் :-

(அ) காணியின் சந்தைப் பெறுமதியானது, அது கொள்ளப்படும்போது இருந்த அதேநிலையில் அத்தகைய கட்டளை வெளியிடப்பட்ட தேதியன்று இருந்திருந்தால் அக்காணிக்கு என்ன சந்தைப்பெறுமதி இருந்திருக்குமோ அச்சந்தைப் பெறுமதியுடன் அத்தகைய தேதிக்குப் பின்னர் அத்தகைய காணிக்கு நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட திருத்தங்கள் எவையும் இருந்தால், அவற்றுக்காக நியாயமான அளவு அதிகரிக்கப்பட்ட தொகையொன்றாகவும் கருதப்படுதல் வேண்டும் ;

(ஆ) அத்தகைய கட்டளை வெளியிடப்பட்ட தேதியன்று காணியின் சந்தைப் பெறுமதியை நிர்ணயிக்கையில், இச்சட்டத்தின் ஏற்பாடுகளைப் பின்பற்றி அதிகாரசபையினால் செய்யப்பட்ட ஏதேனும் அபிவிருத்தி வேலையிலிருந்து அல்லது வேறு செயற்பாட்டிலிருந்து நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வந்துற்றிருக்கக்கூடிய ஏதேனும் நன்மை அல்லது பெறுமதி அதிகரிப்பு அல்லது வந்துறக்கூடிய சாத்தியக்கூறுகள் நன்மையின் ஏதேனும் எதிர்பார்ப்பு அல்லது பெறுமதியின் அதிகரிப்பு எதுவும் கருத்தில்கொள்ளப்படுதலாகாது.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், பெயர் குறிக்கப்பட்ட இடப்பரப்புக்குள் அமைந்துள்ள ஏதேனும் காணி அல்லது ஏதேனும் காணியிலுள்ள அக்கறை கொள்ளப்படுவதன் விளைவாக, எவரேனுமாள், தமது நிரந்தரமான வதிவிடத்துக்கான அல்லது வாழ்க்கை வழிவகைகளுக்கான இழப்பை அல்லது சேதத்தை உறுமிடத்து, அத்தகைய ஆளுக்கு , (2) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய ஆளுக்குச் செலுத்தப்படும் நட்டஈட்டுடன் சேர்த்து, அரசாங்கத்தின் தேசிய தன்னிச்சையற்ற மீளக்குடியமர்த்தற் கொள்கைக்கிணங்க நட்டஈடளிக்கப்படுதலும் வேண்டும்.

(4) அதிகாரசபையின் நோக்கங்களுக்காக (1) ஆம் உட்பிரிவின் கீழ் காணி எதுவும் அல்லது ஏதேனும் காணியிலுள்ள அக்கறை கொள்ளப்படுவதற்காக நட்டஈடாகச் செலுத்தப்படற்பாலதான பணத்தொகை எதுவும் அதிகாரசபையினால் செலுத்தப்படல் வேண்டும்.

*அசைவுள்ள அசைவற்ற அரச ஆதனங்கள் அதிகார சபைக்குக் கிடைக்கச் செய்தல்.*

**20.** (1) அதிகாரசபையின் ஏதேனும் நோக்கத்துக்காக அரசின் அசைவற்ற ஆதனம் எதுவும் தேவைப்படுமிடத்து, அத்தகைய நோக்கம் முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் (454 அத்தியாயம்) எந்நோக்கமொன்றிற்காக விசேட கொடை அல்லது குத்தகை ஒன்று செய்யப்படமுடியுமோ அந்நோக்கமொன்றாகக் கருதப்படல் வேண்டும் அத்துடன் அக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க, அதிகாரசபையின் அத்தகைய ஆதனத்தின் விசேட கொடையொன்றுக்கு அல்லது குத்தகையொன்றுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் ஏதேனும் நோக்கத்திற்காக அரசின் ஏதேனும் அசைவுள்ள ஆதனம் எதுவும் தேவைப்படுமிடத்து, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம் அமைச்சர், அத்தகைய அசைவுள்ள ஆதனத்தின் உடைமையையும் பயன்பாட்டையும் அதிகாரசபைக்கு கைமாற்றம் செய்து உரித்தாக்கலாம் :

ஆயின் எவ்வாறாயினும் அத்தகைய அசைவுள்ள ஆதனத்தின் மீது கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கின்ற அமைச்சரின் ஒருப்பாடின்றி, அரசின் அசைவுள்ள ஆதனம் எதையும் பாதிக்கும் கட்டளை எதுவும், இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் அமைச்சரினால் ஆக்கப்படுதலாகாது.

## அத்தியாயம் III

### ***நிதி***

*அதிகார சபையின் நிதியம்.*

**21.** (1) அதிகாரசபைக்கு அதன் சொந்த நிதியம் இருத்தல் வேண்டும். (இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்.)

(2) பின்வருவன, நிதியத்துக்குச் செலுத்தப்படல் வேண்டும் —

(அ) அதிகாரசபையின் பயன்பாட்டுக்கான காலத்துக்குக் காலம் பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்படக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் தனது தத்துவங்களைப் பிரயோகிக்கையில், கடமைகளைப் புரிகையில் மற்றும் பணிகளை நிறைவேற்றுகையில் அதிகாரசபையினால் பெறப்படக் கூடிய அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(இ) கொடைகள், மானியக் கொடைகள் அல்லது நன்கொடைகள் வகையாக அதிகாரசபையினால் பெறப்படும் அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(ஈ) அதிகாரசபையின் வரவுக்கு வந்துறுகின்ற அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்,

(3) இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையில், கடமைகளைப் புரிகையில் மற்றும் பணிகளை நிறைவேற்றுகையில் அதிகாரசபையினால் உறப்படும் செலவினம் எதனையும் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் அத்துடன் நிதியத்திலிருந்து செலுத்தப்படுவதற்கு தேவைப்படுத்தப்படுகின்ற அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**22.** (1) எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளில் முரணாக எது எப்படி இருப்பினும், அதிகார சபையானது, அதன் கடமைகள் எவற்றையும் நிறைவேற்றும் நோக்கத்திற்காக நிதியை, அமைச்சரின் அங்கீகாரத்துடன் ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்கு அல்லது ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்திற்கு குறித்தொதுக்கலாம் என்பதுடன், சொல்லப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதும் அத்தகைய கடமைகளை நிறைவேற்றுவதில் உறப்பட்ட செலவினத்துக்கு முறையாகக் கணக்குக் காட்டுவதும், விடயத்துக்கேற்ப அத்தகைய கூட்டுத்தாபனத்தின் அல்லது திணைக்களத்தின் கடமையாதலும் வேண்டும்.

கடமைகளை நிறைவேற்றுவதில் உதவுவதற்காக ஏதேனும் பகிரங்க கூட்டுத்தாபனம் முதலியவற்றை அழைப்பதற்கு அதிகார சபைக்குள்ள தத்துவம்.

(2) எக்கூட்டுத்தபானத்துக்கு அல்லது அரசாங்கத் திணைக்களத்துக்கு (1) ஆம் உட்பிரிவின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதோ, அக்கூட்டுத்தாபனத்தை அல்லது திணைக்களத்தை, அத்தகைய நிதியின் செலவினம் தொடர்பில் அதிகார சபையினால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய தகவலைக் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்துவதற்கு அதிகார சபை உரித்துடையதாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகுவது அத்தகைய கூட்டுத்தாபனத்தின் அல்லது திணைக்களத்தின் கடமையாதலும் வேண்டும்.

**23.** அதிகாரசபையானது அது தோதானதெனக் கருதக் கூடியவாறான அத்தகைய வங்கியுடன் அல்லது வங்கிகளுடன் கணக்கொன்றை அல்லது கணக்குகளை ஆரம்பித்துப் பேணிவரலாம் என்பதுடன், அத்தகைய கணக்கு அல்லது கணக்குகள் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கொடுக்கல் வாங்கல்களுக்குரிய அரசாங்கத்தின் தற்போதுள்ள நிதிசார் ஒழுங்கு விதிகளுக்கிணங்க செயற்படுதலும் வேண்டும்.

அதிகாரசபை கணக்குகளைப் பேணுதல்.

**24.** அமைச்சரானவர், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன், நன்கொடை அல்லது ஏதேனும் அத்தகைய பொருட்களின் இறக்குமதி அல்லது கொள்வனவு, அதிகாரசபையின் குறிக்கோள்களின் முன்னேற்றத்துக்கு உசிதமானதெனக் கருதப்படுமிடத்து, அதிகாரசபைக்குக் கொடையளிக்கப்பட்ட அல்லது அதிகாரசபையால் அதன் நிதிகள் மூலம் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது கொள்வனவு செய்யப்பட்ட எவையேனும் பண்டங்கள் மீதான சுங்கத் தீர்வைகள் அல்லது உற்பத்தி வரிக்கொடுப்பனவிலிருந்து அதிகாரசபைக்கு விலக்களிக்கலாம்.

வரிகள் கொடுப்பனவிலிருந்து அதிகாரசபைக்கு விலக்களித்தல்.

*நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்.*

**25.** (1) அதிகாரசபையின் நிதியாண்டு பஞ்சாங்காண்டாதல் வேண்டும்.

(2) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பிலான அரசிலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், அதிகாரசபையின் கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

*அதிகார சபையின் கடனெடுப்பு தத்துவங்களும் அரசாங்க உத்தர வாதங்களும்.*

**26.** (1) இச்சட்டத்தின்கீழ் அதன் கடமைகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக இப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, அரசாங்கம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய நியதி, நிபந்தனைகளுக்கு அமைய சனாதிபதியால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் உள்ளூர் சர்வதேச அல்லது வெளிநாட்டு ஒழுங்கமைப்பிலிருந்து அதிகாரசபை பணங்களை கடனெடுப்பதற்கு இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றது.

(2) இப்பிரிவின்கீழ் கடனெடுக்கப்பட அதிகாரமளிக்கப்பட்ட கடன்கள் வெளிநாட்டு நாணய இனப்பெறுமதியில் தீர்மானிக்கப்படலாம்.

(3) அரசாங்கத்தின் சார்பில், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர், (1) ஆம் உட்பிரிவின் கீழ் சபையினால் திரட்டப்பட்ட கடன்களுக்கு உத்தரவாதமளிக்கலாம். உத்தரவாதம் ஒன்றின்மீது, உடனடியாக அமைச்சரானவர், அத்தகைய உத்தரவாதத்தின் விபரங்களைத் தருகின்ற கூற்றொன்றை பாராளுமன்றத்தின் முன், உடன் கொண்டு வருதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் உத்தரவாதமொன்றை நிறைவேற்றுவதற்கு தேவையான ஏதேனும் தொகை, பாராளுமன்றத்தின் முன் அனுமதியுடன் திரட்டு நிதியிலிருந்து செலுத்தப்படலாம்.

(5) சனாதிபதியால் அங்கீகரிக்கப்பட்டதும், அரசாங்கத்தால் உத்தரவாதமளிக்கப்பட்டதுமான ஏதேனும் சர்வதேச அல்லது வெளிநாட்டு ஒழுங்கமைப்பினால் அதிகாரசபைக்குச் செய்யப்பட்ட ஏதேனும் கடனின் விடயத்தில், அரசாங்கமானது, ஏதேனும் நட்டதைப் பொறுப்பேற்றுக் கொள்ளுதல் வேண்டுமென்பதுடன், அந்தக் கடன் எந்த நாணயத்தில் அல்லது நாணயங்களில் வெளிப்

படுத்தப்பட்டதோ அந்த நாணயம் அல்லது நாணங்கள் தொடர்பில் ரூபாவை ஏதேனும் மீளப்பெறுமதி செய்வதினின்று விளைகின்ற ஏதேனும் இலாலபத்திற்கு உரித்துடையதாதலும் வேண்டும். அத்துடன் அத்தகைய ஒவ்வொரு நட்டத்தினதும் மொத்தத் தொகை திரட்டு நிதியத்திற்குப் பொறுப்பாக்கப்படுதலும் வேண்டும்.

(6) நிதி என்னும் விடயத்துக்குப்பொறுப்பான அமைச்சர், அவரது கைப்பட்ட சாதனத்தினால், அரசாங்கத்திற்கும் ஏதேனும் உள்ளூர் ஒழுங்கமைப்பிற்கும் இடையிலான உத்தரவாத உடன்படிக்கை எதற்கும் அரசாங்கத்தின் சார்பில் கையொப்பமிட இத்தால் தத்துவமளிக்கப்படுகின்றார்.

## அத்தியாயம் IV

### அதிகாரசபையின் பணியாட்டொகுதி

**27.** (1) சபையானது அதிகார சபையின் பிரதான நிறைவேற்று அலுவலராகவிருக்க வேண்டிய அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதி ஒருவரை நியமித்தல் வேண்டும். *பணிப்பாளர் தலைமையதிபதி.*

(2) பணிப்பாளர் தலைமையதிபதியானவர், அதிகாரசபையின் பொதுப் பணிப்புக்கும், கட்டுப்பாட்டுக்கும் அமைவாக, அதிகார சபையின் அலுவல்கள், கொடுக்கல் வாங்கல்கள் அதன் தத்துவங்கள், கடமைகள், பணிகள், என்பவற்றைப் பிரயோகித்தல், நிறைவேற்றுதல், அத்துடன் புரிதல், அத்துடன் அதிகாரசபையின் அலுவலர்கள் சேவையாளர்கள் என்போரின் நிருவாகமும் கட்டுப்பாடும் என்பவற்றிற்குப் பொறுப்புடையவராக இருத்தல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதியானவர், அதிகாரசபையின் அங்கீகாரத்துடன், அவ்வாறு செய்வது அவசியமானதென அவர் கருதும் போதெல்லாம், எவரேனும் அலுவருக்கு அல்லது சேவையாளருக்கு இச்சட்டத்தினால் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, பணியை அல்லது கடமையை கையளிக்கலாம் என்பதுடன், அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளர் பணிப்பாளர் தலைமையதிபதியின் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புக்களுக்கு அமைவாக, அத்தகைய தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகித்தலும், நிறைவேற்றுதலும் அதனுடன் புரிதலும் வேண்டும்.

*அதிகாரசபையின் பணியாட்டொகுதி.*

**28.** (1) அதிகாரசபையானது, அதன் பணிகளைத் திறம்பட நிறைவேற்றுவதற்கு அவசியமென அது கருதுகின்றவாறான அத்தகைய வேறு அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படும் அலுவலர்களும் சேவையாளர்களும், சனாதிபதியின் அங்கீகாரத்துடன் அதிகார சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய விதத்திலும், அத்தகைய வீதங்களிலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கு அமைந்தவராதலும் வேண்டும்.

(3) அதிகாரசபையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவையில் உள்ள அலுவலர் எவரும், அலுவலரினதும், பொது நிர்வாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளரினதும் சம்மதத்துடன் அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப் பகுதிக்குத் தற்காலிகமாக அவரது சம்மதத்துடன் அதிகார சபைக்கு நியமிக்கப்படலாம் அல்லது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(4) அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு, பகிரங்க சேவையில் உள்ள அலுவலர் எவரும், தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு பகிரங்க சேவையில் உள்ள அலுவலர் எவரும், நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன் அவருக்கும், அவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றிற்கு அரசாங்கத்திற்குச் சேவை செய்வதாக உடன்பட்டுக்கொண்டவாரான எவரேனும் ஆளை, அதிகாரசபை ஊழியத்திலமர்த்துமிடத்து, அந்த ஆளினால் அதிகாரசபைக்கு புரியப்படும் சேவைக்காலப் பகுதியெதுவும், அத்தகைய உடன்படிக்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அரசாங்கத்திற்கு ஆற்றப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(7) அதிகாரசபையின் வேண்டுகோளின்பேரில், உள்ளூராட்சிச் சேவையின் எவரேனும் உறுப்பினர் அல்லது ஓர் உள்ளூரதிகாரசபையின் வேறெவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், விடயத்துக்கேற்ப அத்தகைய உள்ளூராட்சிச் சேவை ஆணைக்குழுவின் அல்லது உள்ளூரதிகாரசபையின் அத்தகைய உறுப்பினரின், அலுவலரின் அல்லது சேவையாளரின் சம்மதத்துடன், அதிகாரசபையால் தீர்மானிக்கப்படககூடிய வாறான அத்தகைய காலப்பகுதிக்கு அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன், ஓய்வூதிய அல்லது சகாயநிதிய உரிமைகள் உட்பட அதிகாரசபையினாலும், உள்ளூராட்சிச் சேவை ஆணைக்குழு அல்லது அந்த உள்ளூரதிகார சபையினாலும் உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகள் நிபந்தனைகள் என்பனமீது நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(8) அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு, (7) ஆம் உட்பிரிவின்கீழ் உள்ளூராட்சிச் சேவையின் எவரேனும் உறுப்பினர் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் அலுவலர் அல்லது சேவையாளர் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, இவ்வதிகாரசபையின் அத்தகைய பணியாட்டொகுதியின் வேறெவரேனும் உறுப்பினருக்குள்ள அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவராதல் வேண்டும்.

*அதிகார சபையின் பணியாட்டொகுதிக்கு பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல்.*

**29.** (1) அதிகாரசபையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்கக் கூட்டுத்தாபனத்தில் உள்ள அலுவலர் அல்லது சேவையாளர் எவரும், அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளரினதும் அத்தகைய கூட்டுத்தாபனத்தின் ஆளும் சபையினதும் சம்மதத்துடன், அதிகாரசபையால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய காலப்பகுதிக்கு அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது அதே போன்ற சம்மதத்துடன் அதிகாரசபையினாலும் அத்தகைய கூட்டுத்தாபனத்தின் ஆளும் சபையினாலும் உடன்பட்டுக்கொள்

ளப்படக்கூடியவாறான ஓய்வூதியம் அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பிலான நியதி, நிபந்தனைகள் உள்ளடங்கலாக அத்தகைய நியதி நிபந்தனைகளின்மீது, அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) எவரேனும் ஆள், அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு (1) ஆம் உட்பிரிவின்கீழ் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, அவர் பணியாட்டொகுதியின் வேறெவரேனும் உறுப்பினர்போன்று அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டிற்கு அமைந்தவராதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கத்துக்காக ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம் தொடர்பாக "ஆளும் சபை" என்பது, அந்தப் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் நிருவாகமும் முகாமையும் எந்தப் பணிப்பாளர் சபைக்கு அல்லது வேறு குழுவுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதோ அந்தப் பணிப்பாளர்சபை அல்லது வேறு குழு என்று பொருளாகும்.

## அத்தியாயம் V

### பொதுவானவை

*அதிகாரசபையின் தத்துவங்களைக் கையளித்தல்.*

**30.** (1) சபையானது எழுத்தில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, அச்சபைக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன் மீது விதிக்கப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை ஒரு உறுப்பினருக்கு அல்லது தவிசாளருக்குக் கையளிக்கலாம்.

(2) அத்தகைய கையளிப்பு எது எப்படியிருப்பினும், அதிகாரசபையானது, அவ்வாறு கையளிக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் தத்துவத்தை கடமையை அல்லது பணியை பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்.

*அபிவிருத்தித் திட்டங்களைக் கொண்டுநடாத்துவதற்கென வழங்கப்பட்ட நிதி உதவி அதற்குப் பயன்படுத்தப் பட்டதென்பதை உறுதிப்படுத்தல்.*

**31.** அதிகாரசபையினால் எவரேனும் ஆளுக்கு ஏதேனும் பெயர்குறிப்பிட்ட இடப்பரப்பில் அபிவிருத்தித் திட்டமொன்றைக் கொண்டுநடாத்துவதற்கென வழங்கப்பட்ட ஏதேனும் நிதி உதவியானது, அது வழங்கப்பட்டதான நோக்கத்திற்குப் பயன்படுத்தப் பட்டது என்பதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா நடவடிக்கைகளையும் அதிகாரசபை எடுத்தல் வேண்டும்.

**32.** அதிகாரசபையின் உறுப்பினர் ஒருவர் பங்காளர் ஒருவராக, பணிப்பாளர் ஒருவராக அல்லது பங்காளர் ஒருவராக நேரடியாக அல்லது மறைமுக மாக அக்கறை கொண்டுள்ளவராக இருக்கும் பொறுப்புமுயற்சி ஒன்றில் ஏதேனும் கொடுக்கல் வாங்கல் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டாலொழிய அதிகார சபையானது, முதலீடு ஒன்றைச் செய்தலோ அல்லது வேறுவகை யாகத் தொழிலைக் கொண்டுநடத்துதலோ ஆகாது.

*அமைச்சரினால் அங்கீகரிக்கப் பட்டாலொழிய உறுப்பினர் ஒருவர் அக்கறை கொண்டிருக்கும் பொறுப்பு முயற்சியுடன் அதிகாரசபை தொழிலைக் கொண்டுநடாத் துதலாகாது.*

**33.** அமைச்சரானவர் தாம் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஆளினால் அல்லது ஆட்களினால் அதிகாரசபையின் எல்லா அல்லது எவையேனும் செயற்பாடுகள் புலனாய்வு செய்யப்பட்டு அறிக்கையிடப்படல் வேண்டுமெனக் கட்டளையிட லாம் என்பதுடன், அத்தகைய கட்டளை ஆக்கப்பட்டதன்மேல் அதிகாரசபையானது அத்தகைய கட்டளையைக் கொண்டு நடாத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா வசதிகளையும் வழங்குதலும் வேண்டும்.

*செயற்பாடுகள் பற்றிப் புலனாய்வு செய்வதற்குக் கட்டளை யிடுவதற்கு அமைச்சருக் குள்ள தத்துவங்கள்.*

**34.** (1) அமைச்சர் அதிகாரசபையின் கடமைகளைப் புரிவது தொடர்பாகவும் தத்துவங்களைப் பிரயோகிப்பது தொடர்பாகவும் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளை எழுத்தில் அதிகாரசபைக்கு வழங்கலாம். அத்தகைய பணிப்புக்களுடன் இணங்கியொழுகுவது அதிகாரசபையின் கடமையாதலும் வேண்டும்.

*அமைச்சரின் பணிப்புக்கள்.*

(2) அமைச்சரானவர் அதிகாரசபையின் ஆதனம் தொடர் பாகவும், செயற்பாடுகள் தொடர்பாகவும் தாம் தேவைப்படுத் தக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் விவரத்திரட்டுக் களையும் கணக்குகளையும் வேறு தகவலையும் தமக்கு எழுத்தில் கொடுத்துதவுமாறு காலத்திற்குக்காலம் அதிகாரசபையைப் பணிக்கலாம். அத்தகைய பணிப்புடன் இணங்கியொழுகுவது அதிகாரசபையின் கடமையாதலும் வேண்டும்.

*அதிகாரசபையானது இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்படல்.*

**35.** அதிகாரசபையானது, இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

*அதிகாரசபையின் உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் சேவையாளர்கள் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல்.*

**36.** அதிகாரசபையானது எல்லா உறுப்பினர்களும், அலுவலர்களும், சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குள்ளும், அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாக்க கருதப்படுதல் வேண்டும்.

*இச்சட்டத்தின்கீழ் அல்லது அதிகாரசபையின் பணிப்பின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கான பாதுகாப்பு.*

**37.** (1) துடர்ச்சி அல்லது குற்ற வழக்கு எதுவும்

(அ) இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபையினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் சட்டபூர்வமான செயலுக்காக அதிகாரசபைக் கெதிராக ; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது அதிகாரசபையின் பணிப்பின்மீது நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் சட்டபூர்வமான செயலுக்காக அதிகாரசபையின் எவரேனும் உறுப்பினர்களுக்கு, அலுவலருக்கு, சேவையாளருக்கு அல்லது முகவருக்கு எதிராக

இருத்தல் ஆகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னிலையில் அதிகாரசபைக்கு எதிராக அல்லது அதிகாரசபையால் கொண்டுவரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அதிகாரசபையினால் உறப்பட்ட ஏதேனும் செலவினம் அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும், அத்துடன் ஏதேனும் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுத் தொகைகள் அதிகாரசபையின் நிதியத்தில் வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அல்லது அதிகாரசபையின் பணிப்பின் மீது செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அவருக்கெதிராக கொண்டுவரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) எனும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட எவரேனும் அதத்கைய ஆளினால் உறப் பட்ட ஏதேனும் செலவு அச்செயல் நல்லெண்ணத்துடன் செய்யப் பட்டதென நீதிமன்றம் கருதினால், அத்தகைய துடர்ச்சியை அல் லது குற்றவழக்கில் அத்தகைய செலவுகள் அவரால் அறவிடப் பட்டால் ஒழிய அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப் படுதல் வேண்டும்.

**38.** (1) அமைச்சரானவர், அதிகாரசபையின் கலந்தா லோசனையுடன் இச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படவேண்டிய கருமங்கள் தொடர்பாக அல்லது எக்கருமங்கள் தொடர்பாக ஒழுங்குவிததிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப் பட்டுள்ளதோ அக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். ஒழுங்கு விதிகள்.

(2) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக் கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடை முறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் அது வெளி பிடப்பட்டதன் பின்னர் வசதியாக கூடியளவு விரைவாக அங்கீ காரத்திற்கெனப் பாராளுமன்றத்தின் முன்கொண்டுவரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி நீக்கஞ்செய்யப்பட்டதாகக் கருதப் பட்ட தேதி பற்றிய அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

விதிகள்.

**39.** (1) அதிகாரசபையானது, இச்சட்டத்தின்கீழ் விதிகள் ஆக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட அல்லது விதி கள் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் விதிகளை ஆக்கலாம்.

(2) அதிகாரசபையினால் ஆக்கப்படும் விதி ஒவ்வொன்றும் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல் லது அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**40.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள்கோடல்.

**41.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலன்றி -

"அபிவிருத்திக் கருத்திட்டம்" என்பது பெயர் குறிப்பிடப்பட்ட இடப்பரப்பின் பொருளாதார, சமூக, சூழல் நிலைமை களைச் சீர்ப்படுத்தும் ஏதேனும் பகிரங்க அல்லது தனியார் செயற்பாடு அல்லது உற்பத்தி, வருவாய், தொழில்வாய்ப்பு என்பனவற்றை உருவாக்கும் செயற் பாடு எனப் பொருள்படும் ;

"சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை" என்பது, 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்டவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"உள்ளூரதிகார சபை" என்பது ஏதேனும் மாநகரசபை, நகர சபை, பிரதேசசபை எனப் பொருள்படும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் சபையினால் அல்லது பிரதேச சபையினால் பிரயோகிக்கப்படும், புரியப்படும் அத் துடன் நிறைவேற்றப்படும் தத்துவங்களுக்கு, கடமை களுக்கு அல்லது பணிகளுக்கு நேரொத்த அல்லது அவற்றைப்போன்ற தத்துவங்களை, கடமைகளை, அத்துடன் பணிகளைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டு தாபிக்கப்படும் ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்கும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*